**ஏறாவூர் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் பற்று பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 7,598,610 தொகையான காலங்கடந்த வைப்புக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 11,161,865 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 30,764,081 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய ரூபா 746,624 தொகையான களியாட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

சபையினால் பேணப்படும் காசேட்டின் படி மீளாய்வாண்டின் ஒவ்வொருமாத இறுதியிலும் ரூபா 50.3 மில்லியன் முதல் ரூபா 22.5 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்படுகின்றது. இதனை வட்டி உழைக்கும் நிலையான வைப்பு அல்லது அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 2.4 மில்லியன் தொகை வட்டி வருமானத்தை இழந்து வருகின்றது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) செங்கலடி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 175,000 பெறுமதியுடைய உழவு இயந்திரமானது 2013 ஆம் ஆண்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அதனை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படும் ரூபா 50,000 பெறுமதியான மோட்டார் சைக்கிளும் கை உழவு இயந்திரம் மற்றும் ரூபா 1,750,000 பெறுமதியான லொறி என்பன திருத்தம் செய்து பயன்படுத்தலாது் மூன்று வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

(ஆ) சபைக்குச் சொந்தமான 10 KW மின்சாரம் பிறப்பாக்கி இயந்திரத்தை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2013 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்று காணப்படுகின்றது.

## 3.3 திண்மக்கழிவு முறைமை

---

பிரதேச எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொண்டு கூட்டுப் பசளை தயாரிக்க ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் 2010 ஆம் ஆண்டு ரூபா 320,000 பெறுமதியான கூட்டுப் பசளை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்சாரம் பிறப்பாக்கி இயந்திரம் என்பன பெற்றுக்கொள்ளப்படிருந்த போதிலும் அது 2017 ஏப்ரல் 26 ஆந் திகதி வரை செயற்படுத்தபடாது துருப்பிடித்துக் காணப்பட்டன.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| **அறிக்கைக்கான தொடர்பு** | | **உள்ளடக்கப்பட்ட விடயம்** |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 2.2.3 (அ) | பதவியினர் கடன் நிலுவை ரூபா 841,091 பதினான்கு ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்காமை. |
| 2015 | 2.2.4 (அ) | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்காமை |
| 2015 | 2.2.3 | நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை குத்தகை மற்றும் சந்தைக் குத்தகைகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 3.2.3 | நிறுவப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 3.2.4 | ஆதனங்கள் மீது வீத வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாடுகள்** | **விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்** |
|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | பழுதடைந்த வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை திருத்தம் செய்து பயன்படுத்துதல். |